

**ஸ்ரீ மஹாவீர வைபவம்**

**ஸ்ரீ ரகுவீர கத்யம்**

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தேசிகன் அருளிச்செய்த ஸ்ரீ மஹாவீர வைபவம்



(பாலகாண்டம்)

**ஸ்லோகம் - (05)**

உலகிலுள்ள தாமரைகளை எல்லாம் தனது உதயத்தால் சூரியன் மலரச்செய்வான். எம்பெருமானாகிய நீ சூரிய குலத்தில் அவதரித்தருளினாய். சூரியனது குலம் பெருமைக்கு உறைவிடமாக உலகிற்கு உதவிபுரிந்து மகிழச் செய்வதால் தாமரையாகின்றது. உனது அவதாரத்தால் அந்தக் குலம் மிக்க பெருமை பெற்றது. ஆதலால் சூரியனது குலமாகிய தாமரையை மலரச் செய்யும் சூரியனாக நீ விளங்குகின்றாய்.

**ஸ்லோகம் - (06)**

தசரத சக்கரவர்த்தி அனைத்து திசைகளிலும் மற்றும் தேவலோகத்திலும் தேரைச் செலுத்த வல்லவன். தேவர்களுக்கு அரசனான இந்திரன், அசுரர்களுடன் பலமுறை போர் செய்ய நேரிட்டது. இந்திரனால் அசுரர்களை வெல்ல முடியவில்லை. அந்த சமயங்களில் தசரதன் தேவலோகம் சென்று, இந்திரனுக்கு உதவிபுரிந்து அசுரர்களை புறங்காட்டி ஓடச்செய்வான். இத்தகைய வல்லமை பெற்ற தசரதன், வேதத்தைக் கற்று, முனிவர்களின் கடனையும், வேள்விகளைச் செய்து தேவர்களின் கடனையும் தீர்த்துவிட்டான். புத்திரப்பேறு இல்லாமையால், பித்ருக்களின் கடன் மட்டும் எஞ்சியிருந்தது. எம்பெருமானாகிய நீ, தசரதசக்கரவர்த்திக்குத் திருமகனாக அவதரித்து, உன் தந்தையின் மூன்றாவது கடனையும் தீர்த்து வைத்தாய்.




**ஸ்லோகம் - (07)**

ப்ரபஞ்சம் முழுவதும் உன்னிடமிருந்து தோன்றுவதால், அனைத்திற்கும் காரணமாக நீ இருக்கின்றாய். இத்தகைய பெருமைகளை எல்லாம் மறைத்துக்கொண்டு, மற்ற குழந்தைகளைப்போல் கோஸலையின் புத்திரனாக அவதரித்தாய். இவ்வாறு கர்ப்பவாஸம் - பூமியில் அவதரித்தல் – திருமுலைப்பால் உண்டல் - அழுதல் - மணலில் விளையாடுதல் போன்ற உன் செயல்களைக் கண்டு, பல மானிடர்கள் உன்னை ஒரு பரம்பொருள் என்பதை அறியாமல் இருந்தனர்.

**ஸ்லோகம் - (08)**

விஸ்வாமித்ர மஹரிஷி பல வேள்விகளைச் செய்தார். ஒவ்வொரு வேள்வியிலும் அரக்கர்களின் உபத்திரவம் அதிகமாக இருந்தது. ஒரு வேள்வியையாவது முழுமையாக முடித்து அவர் அவபிரதமாடியதில்லை

(வேள்வியின் முடிவில் நீராடுதல்). அவர் உன் தந்தையான தசரதனிடம் வந்து வேண்டி, உன்னையும் உன் தம்பியான இலக்குவனையும் அழைத்துச் சென்றார். நீ அரக்கர்களைக் கொன்று, அவருடைய வேள்விக்கு ஏற்பட்ட தடையை நீக்கிக் காத்தருளினாய். இதில் உனக்குச் சிறிதாவது சிரமம் ஏற்பட்டதோ? அரக்கர்களுடன் போர் புரிவதும், அவர்களைக் கொல்வதும் குழந்தைகளின் விளையாட்டுப்போல் அல்லவோ உனக்கு இருந்தன. இளம்பருவத்திலேயே உன் வல்லமைக்கு எல்லையுண்டோ?

**தொடரும்...**


Discover Nashik